**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 25 பெப்ரவரி 2020 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 15 யூலை 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 06 செப்தெம்பர் 2020 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்வருங்காலங்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்படும். | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

#### (ஆ) கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் ரூபா 881,535 செலவில் அமைக்கப்பட்ட வாராந்த சந்தை காணி கட்டடத்தில் உள்ளடக்கப்படாமையால் நிதிக்கூற்றுக்களில் காணி கட்டட பெறுமதி குறைத்துக்காட்டப்பட்டுள்ளது. | 2020 ஆம் ஆண்டு இறுதி கணக்கறிக்கையில் உள்ளடக்கப்படும். | சந்தை கட்டடத்தின் பெறுமதியினை காணி கட்டட பெறுமதிக்குள் உள்ளடக்கப்படல் வேண்டும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |
| | உப பிரிவு 16(2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய சட்டத்திற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் | | | |
| | பிரிவு 158 (1) | ரூபா 2,503,684 ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களின் பற்றாணைச் சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனவரி நிலுவை தொடர்பாக சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதி | | | |
| | நிதி ஒழுங்கு விதி இல 571 | ரூபா 207,420 ஆன காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதிக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(ஈ) பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2018.01.24 ஆம் திகதிய இலக்கம் 02/2018 | பிரசைகள்/பயனாளிகள் சமவாயத்திற்கு ஏற்புடையதாக பொதுமக்கள் சேவைப்பட்டயம் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சேவைப்பட்டயம் திருத்தப்பட்டு புதிதாக தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய பிரசைகள் சேவைப்பட்டயம் காட்சிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(உ) ஏனைய சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2018.07.19 ஆம் திகதிய 2018/e உள்@ராட்சி – 01 ஆம் இலக்க உள்@ராட்சி சுற்றுநிருபம் | இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. | இது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய இணையத்தள சேவைகளை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1 % சதவீத விற்பனை வரி அறவிடப்படவேண்டிய போதிலும், சபையினால் அவற்றினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | எமது பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசத்தில் இயங்கும் வங்கிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பிரதேச சபை அதிகாரச் சட்டத்திற்கமைய விற்பனை வரியினை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,469,646 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 64,654,300 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 148,500 | 141,787 | 2,503,684 | 129,500 | 222,089 | 2,397,676 |
| வாடகைகள் | 16,336,850 | 15,540,722 | 2,343,730 | 15,598,396 | 16,524,871 | 2,361,520 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,245,200 | 4,207,298 | - | 2,643,900 | 3,524,552 | - |
| ஏனைய வருமானம் | 106,996,230 | 85,885,992 | 8,818,133 | 99,015,714 | 111,154,424 | 50,088,159 |
| | 126,726,780 | 105,775,799 | 13,665,547 | 117,387,510 | 131,425,936 | 54,847,355 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 131,425,936 ஆக இருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 105,775,799 ஆக உள்ளமையினால் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 25,650,137 இனால் குறைவடைந்துள்ளது. | 2019 ஆம் ஆண்டிற்கான நீதிமன்ற தண்டப்பணம் கிடைக்கப்பெறாமையினால் வருமானம் குறைவாகவும் 2018 ஆம் ஆண்டில் கடைகள் வாடகைக்கு விடப்பட்டு வாடகைப் பணம் பெறப்பட்டதனால் வருமானம் அதிகரித்தும் காணப்படுகின்றது. | சபையின் வருமானத்தினை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படுவதுடன் பட்டியலிடப்பட்ட வருமானம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 2.2.3 வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வீதவரி நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,503,684 இனை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களை இனங்கண்டு வரி அறவிட முடியாதுள்ளது. | வீதவரி நிலுவைகளை அறவிட சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் கடை வாடகை நிலுவைகள் ரூபா 274,475 இனை அறவிட சபையினால் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கடை வாடகை நிலுவைகளினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

#### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,549,496 ஆன நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தது. | நீதிமன்ற தண்டப்பணங்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது | நீதிமன்ற தண்டப்பண நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

#### (ஆ) முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 516,587 ஆன முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முத்திரைக் கட்டண நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டம் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உபவிதிக்கமைய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் தயாரிக்கப்பட்ட ஒப்பந்த வேலைகளிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 31 ஒப்பந்த வேலைத்திட்டங்கள் ரூபா 31,300,000 ஆன செயற்பாடுகள் செயற்படுத்த முடியாதிருந்தது. | அபிவிருத்தி ஒதுக்கத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது. பாதீட்டிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் ஒப்பந்த வேலைகளை செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**(இ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் மூலம் ரூபா 2,999,724 செலவில் நிறைவேற்றப்பட்டிருந்த முதலைக்குழி குடிநீர் விநியோகத்திட்டம் 03 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. | தொடர்ந்து நடைமுறைப் படுத்துவதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | திண்மக்கழிவுகள் தரம் பிரிக்காமல் சேகரிக்கப்படுவதுடன் கழிவுகள் கொட்டப்படும் இடங்களில் நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து பிரதேசங்களிலும் திண்மக்கழிவுகள் யாவும் தரம்பிரிக்கப்பட்டு சேகரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மருத்துவப்பரிசோதனை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது | சுகாதாரத் தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்@ராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்பிக்கப்படாமையினால் பிரதேசசபைக்குரிய முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தது. | இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உள்@ராட்சி உதவியாளரினால் உரிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையில் மயான வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மயானக்காவலாளி பதவி அனுமதிக்கப்படவில்லை. | மயான வரிகளை அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 48 ஆண்டுகளுக்கு மேலாக ஆதனவரி மீள் மதிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதன மீள்மதிப்பீடு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | ஆதன வரி மீள்மதிப்பீட்டிற்கு உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 20 மனித வளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை உரிய காலத்தில் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய 2019 ஆம் ஆண்டில் சோலைவரி அறவிடுவதற்காக 12018 ஆதனங்களுக்கு K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்கு K படிவம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. | K படிவங்களை விநியோகிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்து

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டில் உள்ள 06 வாகனங்கள் நாளதுவரை சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உரிய காலத்தில் வாகனங்களிற்கு உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5.2 விளைவற்ற சொத்து

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முன்பள்ளியின் தளபாடங்கள் பராமரிப்பின்றி காணப்படுவதுடன் கடந்த 05 வருடங்களாக செயற்படுத்தப்படாத நிலையில் காணப்படுகிறது. | ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முன்பள்ளியின் தளபாடங்களைப் பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமானது பிரதேச சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் சேவைகளுக்காக பெறுகை திட்டம் இதுவரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பாதுகாப்பு சேவையும், சுத்திகரிப்பு சேவையும் வருட ஆரம்பத்திலேயே பெறுவதனால் இதற்கு பெறுகைத்திட்டம் தயாரிக்கத்தேவை ஏற்படவில்லை. | பெறுகைள் திட்டமானது அனுமதிக்கப்பட்ட மாதிரிக்கமைவாக உரிய காலத்தில் தயாரிப்பதற்குரிய நடவடிக்கை சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் பாதீட்டு செலவிற்கும் உண்மையான செலவுகளுக்கும் இடையே கணிசத்தன்மையான வேறுபாடு காணப்படுவதனால் இது ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்படுகின்றது. | 17 ஆளணி வெற்றிடம் உள்ளமையினாலும் பிரயாணச் செலவுகளுக்கான உத்தியோகத்தர்களின் கோரிக்கையின் அளவு குறைவாகவும் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தினால் கோரப்பட்ட தொகை என்பன குறைவாகவும் காணப்பட்டதனால் உண்மைச்செலவினம் குறைவாகக் காணப்படுகின்றது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |